01. ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம்

குழுவின் பரிந்துரை		எடுக்கப்பட்ட நடவடிக்கை / தற்போதைய நிலைமை
5.2.18	நாட்டினது வரி வருமானத்தை அதிகரிப்பதற்காக வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் அமைப்பு (RAMIS), மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மற்றும் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைப்புச் செய்யும் பணி தாமதம் அடைந்துள்ளது.	API (Application Programming Interface) ஊடாக ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தின் தரவுத் தளத்தில் காணப்படும் தேசிய அடையாள அட்டை தகவல்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பரிமாற்றம் செய்துகொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
5.3.3 (இ)	வரி செலுத்துபவர்களினால் அறிக்கையிடப்படும் தரவுகளின் செம்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு உதவும் தகவல்களைப் பரிமாற்றம் செய்வதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் ஏனைய ஏற்புடைய நிறுவனங்களின் ஒத்துழைப்பை விருத்தி செய்தல் (இதன் போது நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம், இலங்கை மதுவரித் திணைக்களம், சுகாதார அமைச்சு, உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு, கமத்தொழில் திணைக்களம், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம், கம்பனிகள் பதிவாளர், கொழும்பு மாநகர சபை மற்றும் இலங்கை தரக் கட்டளைகள் நிறுவனம் ஆகியவற்றை ஒன்றிணைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.)	API (Application Programming Interface) ஊடாக ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தின் தரவுத் தளத்தில் காணப்படும் தேசிய அடையாள அட்டை தகவல்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பரிமாற்றம் செய்துகொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
8.3.12	கணினி அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல் பாதுகாப்பு முறையைப் (blockchain technology) பயன்படுத்துவதன் காரணமாக தகவல் பரிமாற்றத்தின் போது பாதுகாப்பு பற்றிய எந்தப் பிரச்சினைகளும் எழாத காரணத்தினால் தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம், கடவுச்சீட்டு மற்றும் இன்னும் பல ஆவணங்களை விநியோகிக்கும் போது கணினி அடிப்படையிலான கொடுப்பனவு பாதுகாப்பு முறையைப் (blockchain technology) பயன்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது. எனினும் இதற்கான செலவு அதிகமாக அமையலாம்.	இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையின் தகவல்களை இணைய வழியில் உறுதிப்படுத்தல், செம்மைப்படுத்தல் மற்றும் பரிமாற்றம் செய்வதற்கு ஏற்புடைய விதத்தில் தரவுகளின் அந்தரங்கத்தன்மையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இந்த முறை (block chain technology) பயன்படுத்தப்பட்டுள்ளது.
9.3.15	பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் ஓய்வூதியத் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மற்றும் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் ஆகியவற்றை ஒன்றுடன் மற்றொன்றை இணைத்து இணைய வழியிலான டிஜிட்டல் மேடையொன்றை அமைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது.	API (Application Programming Interface) ஊடாக ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தின் தரவுத் தளத்தில் காணப்படும் தேசிய அடையாள அட்டை தகவல்கள் பதிவாளர் நாயகம் திணைக்களம், ஓய்வூதியத் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் ஆகியவற்றுடன் பரிமாற்றம் செய்துகொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

02. <u>குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்</u>

குழுவின் பரிந்துரை		எடுக்கப்பட்ட நடவடிக்கை / தற்போதைய நிலைமை
5.2.18	நாட்டினது வரி வருமானத்தை அதிகரிப்பதற்காக வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் அமைப்பு (RAMIS), மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மற்றும் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைப்புச் செய்யும் பணி தாமதம் அடைந்துள்ளது.	இதற்குத் தேவையான மேல் நடவடிக்கைகளை எடுப்பதற்கு புதிய குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டமூலத்தை அனுமதிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.
8.3.12	கணினி அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல் பாதுகாப்பு முறையைப் (blockchain technology) பயன்படுத்துவதன் காரணமாக தகவல் பரிமாற்றத்தின் போது பாதுகாப்பு பற்றிய எந்தப் பிரச்சினைகளும் எழாத காரணத்தினால் தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம், கடவுச்சீட்டு மற்றும் இன்னும் பல ஆவணங்களை விநியோகிக்கும் போது கணினி அடிப்படையிலான கொடுப்பனவு பாதுகாப்பு முறையைப் (blockchain technology) பயன்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது. எனினும் இதற்கான செலவு அதிகமாக அமையலாம்.	இந்த கணனி அடிப்படையிலான கொடுப்பனவு முறையை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.
9.3.15	பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் ஓய்வூதியத் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மற்றும் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் ஆகியவற்றை ஒன்றுடன் மற்றொன்றை இணைத்து இணைய வழியிலான டிஜிட்டல் மேடையொன்றை அமைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது.	அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்கள் உட்பட மூன்றாம் தரப்பு நிறுவனங்களுடன் தரவுப் பரிமாற்றத்துக்கான தரவுப் பரிமாற்ற பொறிமுறையொன்றை விருத்தி செய்யும் செய்யும் செயன்முறையொன்று இந்தத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றதோடு, அது இறுதிக் கட்டத்தில் உள்ளது. இதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் புதிய சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒப்பம் : டிரான் அலஸ்
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்
2024.07.